பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
11 10 2026 12 40
ஞாயிற்றுக்கிழமை நண்பகல்
ஆகாஷ்வாணி

தலைப்புச் செய்திகள்

1. சென்னை, பூந்தமல்லி - வடபழநி இடையேயான இரண்டாவது கட்ட மெட்ரோ ரயில் சேவையை பிரதமர் திரு. நரேந்திரமோடி இன்று தொடங்கி வைத்தார்.

2. வேளாண் உற்பத்தியை அதிகரிக்க வழிவகை செய்யும் பிரதமரின் Dhan - Dhaanya திட்டம் தொடங்கப்பட்டு இன்றுடன் ஓராண்டு நிறைவடைகிறது.

3. நவராத்திரி விழா இன்று தொடங்குவதையொட்டி தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

4. சவூதி அரேபியாவின் ரியாத் சர்வதேச விமான நிலையம் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு இந்தியா கண்டனம் தெரிவித்துள்ளது.

5. ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் இன்று கேரளா அணி - காஷி அணியை எதிர்கொள்கிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<><><><><><>

சென்னை, பூந்தமல்லி - வடபழநி இடையேயான இரண்டாவது கட்ட மெட்ரோ ரயில் சேவையை பிரதமர் திரு. நரேந்திரமோடி இன்று தொடங்கி வைத்தார்.

4 ஆயிரத்து 90 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்பட்ட சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் இரண்டாவது கட்டமான பூந்தமல்லி - வடபழனி வழித்தடத்தை பிரதமர் திறந்து வைத்தார்.

பின்னர் இந்த மெட்ரோ ரயிலில் அவர் பயணம் மேற்கொண்டார்.

முன்னதாக சென்னை விமான நிலையம் வந்தடைந்த பிரதமருக்கு தமிழக ஆளுநர் திரு. ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர், மத்திய இணையமைச்சர் டாக்டர். எல். முருகன், முதலமைச்சர் திரு. விஜய் உள்ளிட்டோர் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

பின்னர் இன்று பிற்பகல் நடைபெறும் நிகழ்ச்சியில் தமிழகத்தின் வளர்ச்சிக்கான 13 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களை பிரதமர் தொடங்கி வைக்க உள்ளார்.

3 ஆயிரத்து 700 கோடி ரூபாய் மதிப்பில் அமைக்கப்பட உள்ள தேசிய நெடுஞ்சாலை திட்டங்களுக்கு பிரதமர் அடிக்கல் நாட்டி நிறைவடைந்த திட்டங்களை தொடங்கி வைக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் நெடுஞ்சாலை 744-ன் வடுகபட்டி - தெற்கு வெங்கநல்லூர் சாலை பகுதியையும், மதுரை சுற்றுச்சாலை பகுதியையும் அவர் திறந்து வைக்க உள்ளார்.

பின்னர், 750 கோடி ரூபாய் மதிப்பிலான ரயில்வே உள்கட்டமைப்பு திட்டங்களை நாட்டுக்கு பிரதமர் அர்ப்பணிக்கிறார்.

காரைக்கால் – பேரளம் இடையேயான ரயில் பாதையையும், கோவையில் மூன்று ரயில் மேம்பாலங்களையும் திறந்து வைக்கிறார்.

அம்ரித் பாரத் திட்டத்தின்கீழ், மேம்படுத்தப்பட்ட பழநி, வேலூர் கண்டோன்மென்ட், அம்பாசமுத்திரம், பரமக்குடி மற்றும் நாமக்கல் ரயில் நிலையங்களையும் பிரதமர் திறந்து வைக்க உள்ளார்.

சென்னை ஐ.ஐ.டி வளாகத்தில் ஜலகண்டேஸ்வர் கோவிலில் வழிபடுகிறார்.

சென்னை ஐ.ஐ.டியில் உள்ள சுதா கோபாலகிருஷ்ணன், மூளை ஆராய்ச்சி மையத்தை பிரதமர் நாட்டிற்கு அர்ப்பணிக்கிறார்.

<><><><><><>

வேளாண் உற்பத்தியை அதிகரிக்க வழிவகை செய்யும் பிரதமரின் Dhan - Dhaanya திட்டம் தொடங்கப்பட்டு இன்றுடன் ஓராண்டு நிறைவு செய்கிறது.

இத்திட்டத்தை பிரதமர் திரு. நரேந்திரமோடி, 100 மாவட்டங்களில் கடந்த ஆண்டு இதே நாளில் தொடங்கிவைத்தார்.

இத்திட்டத்தின்கீழ் 11 அமைச்சகங்களின் 36 மத்திய அரசு திட்டங்களை ஒருங்கிணைத்து மாநில அரசின் திட்டங்களுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பொதுத்துறை தனியார் பங்களிப்புடன் விவசாயத்தை மேம்படுத்த இத்திட்டம் வழிவகை செய்கிறது.

இத்திட்டத்தின் கீழ் வேளாண் உற்பத்தியை மேம்படுத்தவும், பாசன வசதியை அதிகரிக்கவும், வேளாண் கடன் வசதி வழங்கவும், சேமிப்புக் கிடங்குகளை அமைக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

<><><><><><>

நவராத்திரி விழா இன்று தொடங்குவதையொட்டி குடியரசுத் துணைத் தலைவர், பிரதமர் உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

குடியரசுத் துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள சமூகவலைதள பதிவில், துர்க்கை அம்மனின் ஆசியுடன் அனைவருக்கும் வலிமை, தைரியம், ஞானம் கிடைக்கட்டும் என்று வாழ்த்தியுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திரமோடி வெளியிட்டுள்ள செய்தியில், ஷைலபுத்ரி அம்மனின் பாதங்களை தலைவணங்குவதாக கூறியுள்ளார்.

அம்மனின் அருளாசியால் அனைவரின் வாழ்க்கையிலும் அமைதியையும், தன்னம்பிக்கையையும் ஏற்படுத்த அவர் வாழ்த்தியுள்ளார்.

<><><><><><>

குஜராத்தில் காந்தி நகர், தேர்தலுக்கான வாக்குப்பதிவு தற்போது நடைபெற்று வருகிறது.

காலை 7 மணிக்கு தொடங்கிய வாக்குப்பதிவு மாலை 6 மணிவரை நடைபெறும்.

காந்தி நகர் நகராட்சிக்குட்பட்ட 44 தொகுதிகளில் பி.ஜே.பி., காங்கிரஸ், ஆம் ஆத்மி கட்சி 130 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

2 லட்சத்து 59 ஆயிரம் வாக்காளர்கள் வாக்களிக்க அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

தேர்தலை சுமூகமாக நடத்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட காவல்துறையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

<><><><><><>

“மக்கள் நலனே தேசத்தின் நலன்” என்பதை, தாரக மந்திரமாகக் கொண்டு செயல்பட்டு வரும் பிரதமர் திரு. நரேந்திர மோடி, 25 ஆண்டுகள் பொதுசேவையை நிறைவு செய்துள்ள நிலையில், அவரது தொலைநோக்குப் பார்வையின் கீழ், வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில், மத்திய அரசு செயல்பட்டு வருகிறது.

இது தொடர்பான சிறப்புத் தொகுப்பில் இன்று குஜராத்தின் துறைமுகங்கள் இடம்பெறுகிறது.

<u>*(வாய்ஸ் ஓவர் - Voice Over - 110 Sec.)*</u>

*குஜராத் மாநிலம், நாட்டின் நெடுந்தூர கடலோரப் பகுதி உள்ள மாநிலமாக திகழ்கிறது.*

*திரு. நரேந்திரமோடி, குஜராத் முதலமைச்சராக பதவி வகித்திருந்த போது பல்வேறு திட்டங்களை கொண்டுவந்து குஜராத்தின் கடல்சார் திறனை உருவாக்கினார்.*

*பொதுத்துறை மற்றும் தனியார் பங்களிப்புடன் இப்பகுதிகளில் தொழில் கட்டமைப்பை அவர் மேம்படுத்தினார்.*

*குஜராத்தின் துறைமுகங்களை மின்சார தொகுப்புகளுடன் இணைத்து சாலைவசதிகளை மேம்படுத்தி ரயில் தடங்கள் அமைத்து தொழில் மையங்களை உருவாக்கி, அப்பகுதியின் வளர்ச்சிக்கு வழிவகை செய்தார்.*

*குஜராத் மாநிலத்தின் Mundra, Hazira மற்றும் Pipavav துறைமுகங்கள் இத்திட்டத்தின்கீழ் வளர்ச்சி அடைந்துள்ளன.*

*குஜராத்தில் வெற்றிகரமாக அமல்படுத்திய இந்த திட்டம், நாடு முழுவதும் சாகர்மாலா திட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.*

*இதன் மூலம் கடந்த 2014 - 2015 நிதியாண்டில் ஆயிரத்து 561 மில்லியன் டன்னாக இருந்த துறைமுகங்களின் கையாளும் திறன் தற்போது 2 ஆயிரத்து 817 மில்லியன் டன்னாக அதிகரித்துள்ளது.*

*இதன் மூலம் நாட்டின் கடல்சார் திட்டங்கள் புதிய சாதனைகளை படைத்துள்ளதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.*

*குஜராத்தில் தொடங்கப்பட்ட துறைமுக விரிவாக்கத் திட்டங்கள் நாடு முழுவதும் விரிவாக்கப்பட்டு, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகை செய்துள்ளதாகவும் அவர் கூறினார்.*

*குஜராத் மாநிலம் தற்போது சரக்குப்பெட்டக உற்பத்தி மையமாக உருவெடுத்துள்ளதாக தேசிய கப்பல்வாரிய உறுப்பினர் திரு. ராகுல் மோடி தெரிவித்துள்ளார்.*

*வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்ட கடலோரப் பகுதிகளை பொருளாதார மையங்களாக மாற்றி துறைமுக மேம்பாட்டு திட்டங்கள் மூலம் உலகளவில் கடல்சார் துறையில் இந்தியாவை முன்னணி நாடாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*

<><><><><><>

சவூதி அரேபியாவின் ரியாத் கிங் காலித் சர்வதேச விமான நிலையம் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு இந்தியா கண்டனம் தெரிவித்துள்ளது.

மத்திய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த தாக்குதலில் உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவிப்பதோடு, காயமடைந்தவர்கள் விரைந்து குணமடைய வாழ்த்துவதாக கூறியுள்ளது.

பொதுமக்கள் மற்றும் குடியிருப்புகள் மீதான தாக்குதல்கள் ஏற்றுக்கொள்ள முடியாது என்று இந்தியா திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

சவூதி அரேபியாவின் இறையாண்மைக்கும், அந்நாட்டு மக்களுக்கும் இந்தியா முழு ஆதரவளிப்பதாக கூறியுள்ளது.

சவூதி அரேபியா, ரியாத் சர்வதேச விமான நிலையத்தில் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் நடத்திய தாக்குதலில் 12 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த தாக்குதலில் 309-க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

இந்த தாக்குதலுக்கு ஐ.நா. பொதுச்செயல் *Antonio Guterres* கண்டனம் தெரிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், பொதுமக்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் சர்வதேச சட்டங்களை மீறிய செயல் என்று தெரிவித்துள்ளார்.

எகிப்து, கத்தார் உள்ளிட்ட பல்வேறு நாடுகள் இந்த தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்துள்ளன.

இதனிடையே சவூதி அரேபியாவுக்கு செல்லும் பல்வேறு விமானங்கள் பாதுகாப்பு காரணங்களால் ரத்து செய்யப்பட்டுள்ளன.

<><><><><><>

நேபாளத்தில் திடீர் வெள்ளப்பெருக்கால் பல்வேறு பகுதிகளில் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

*Gorkha* மாவட்டத்தில் *Budhi Gandaki* ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது.

இந்த வெள்ளத்தால் ஏராளமான வீடுகள்

சேதமடைந்தன. இருப்பினும், உயிர்ச்சேதம் குறித்த தகவல் எதுவும் வெளியாகவில்லை.

Chumnubri பகுதியில் ஏற்பட்ட நிலச்சரிவு காரணமாக இந்த திடீர் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

Trishuli வரையிலான Budhi Gandaki ஆற்றின் கரையோர மக்கள் எச்சரிக்கையுடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதனிடையே, Chumling, Lokpa பகுதிகளில் ஆற்றங்கரையோர பகுதி மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர்.

<><><><><><>

புதுதில்லியில் கைது செய்யப்பட்ட CJP கட்சியின் Abhijeet Dipke Ashutosh, Saurav Das ஆகியோர் இன்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

புதுதில்லி சிறப்பு நீதிமன்றத்துக்கு கொண்டுவரப்பட்ட இவர்கள் 50 ஆயிரம் ரூபாய் ஜாமீன் தொகையின் அடிப்படையில் விடுவிக்கப்பட்டனர்.

<><><><><><>

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் இன்று கேரள அணி – காஷி அணியை எதிர்கொள்கிறது.

லக்னோவில் இப்போட்டி மாலை 5 மணிக்கு தொடங்குகிறது.

Margao_ல் இரவு 7-30 மணிக்கு நடைபெற உள்ள மற்றொரு போட்டியில் சர்ச்சில் பிரதர்ஸ் – மும்பை City அணியை எதிர்கொள்கிறது.

-----------

புதுச்சேரியில் நடைபெறும் ஆஸ்திரேலியா ஏ அணிக்கு எதிரான ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் முதலில் பேட் செய்யும் இந்திய ஏ அணி 275 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

-----------

இந்தியா - வெஸ்ட் இண்டீஸ் இடையேயான மூன்றாவது டுவென்ட்டி - டுவென்ட்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

இந்தூரில் இப்போட்டி இரவு ஏழு மணிக்குத் தொடங்குகிறது.

5 போட்டிகள் கொண்ட இத்தொடரில் இரு அணிகளும் தலா ஒரு போட்டியில் வெற்றிபெற்றன.

------------

ரஞ்சிக்கோப்பை கிரிக்கெட் போட்டியில் தமிழகத்திற்கு எதிராக முதலில் பேட் செய்யும் ராஜஸ்தான் அணி முதல்நாள் உணவு இடைவேளையில் ஒரு விக்கெட் இழப்பிற்கு 100 ரன் எடுத்துள்ளது.

<><><><><><>